இணைந்த வகையில் செயல்படவில்லை என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். எதிர்க்கட்சியாக இயங்குகின்ற எங்களுக்குப் போதுமான வாய்ப்பு அளிக்கவில்லையென்பதை இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். 30 அங்கத்தினர்கள் விவாதத்தில் கலந்து கொண்ட நாட்களில்கூட எங்களில் ஒருவர் இரண்டு பேர்களுக்குத்தான் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. இப்படி குறைவான வாய்ப்பு அளிக்கப்படும் நிலையில் ஜனநாயக முறையில் நாங்கள் எப்படிச் செயலாற்ற முடியும் என்பதைக் கேட்க விரும்புகிறேன். பாராளுமன்ற நடைமுறைகள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(திரு. செ. கந்தப்பன்—தலைமை.)

நாம் இன்றையதினம் 397 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறோம் என்று சொன்னால், அந்தப் பணம் ஏழைகளின் வரிப்பணத்திலிருந்து தான் வந்திருக்கிறது என்பதை உணர வேண்டும். இந்தப் பணத்தைக் கொண்டுதான் நாட்டில் சோஷலிச சமதர்ம சமுதாயத்தை அமைப்பதற்கும், நாட்டுமக்களின் நல்வாழ்வுக்கான திட்டங்களை வகுக்க வேண்டுமென்பதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நாட்டில் பொருளாதார மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும், ஏற்றத்தாழ்வுகள் அகற்றப்பட வேண்டும் என்று சொன்னால் நாட்டில் தொழில் வளம் பெருக வேண்டும், தொழிலாளர் நலன் பாதுகாக்கப்பட வேண்டும், விலைவாசியேற்றம் தடுக்கப்பட வேண்டும்—இவை அத்தனையையும் செய்தாலொழிய நாட்டில் சமதர்ம சமுதாயத்தை ஏற்படுத்த முடியாது. இந்த வேலைகளுக்காக இந்த 397 கோடி ரூபாய் செலவழிக்கவில்லையானால் நாம் கடமையிலிருந்து தவறியவர்களாக ஆவோம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

கடந்த சில மாதங்களாக தொழில் அமைதி கெட்டிருந்ததை நாம் அனைவரும் அறிவோம். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் உடனுக்குடன், அவ்வப்போது தீர்க்கப்பட்டாக வேண்டும். தொழில் வளர்ச்சி பாதிக்காதபடி நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். தொழிலாளர் பிரச்சினைகளில் உடனுக்குடன் தீர்வு காணவேண்டும். தொழிலாளர் நல இலாகாவானது சிறப்பாகச் செயல்படுவதற்கு வேண்டிய வழிவகைகள் செய்யப்பட வேண்டும். இப்போது அந்த இலாகா ஒழுங்காகச் செயல்படவில்லையென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தொழிலாளர்களின் பிரச்சினைகளை அவ்வப்போது தீர்க்காததன் காரணமாக, நமக்கு இவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்த இலாகாவானது, அரசாங்கத்திற்குக் கடன் வசூலிப்பதற்கும், சிறுசேமிப்பு வசூலிப்பதற்கும், பிச்சைக்காரர் மறுவாழ்வுக்காக நிதி வசூலிப்பதற்கும், பாதுகாப்பு நிதி வசூலிப்பதற்கும்தான் பயன்படுத்தப்படுகிறது.

இந்தக் காரியங்களுக்கான நிதியைத் தொழிலாளர் நல இலாகா வசூலித்துக் கொடுக்கவேண்டுமென்று சொல்லும்போது, அந்த இலாகா அதிகாரிகள் இந்த நிதியை வசூலிப்பதற்கு வசதி படைத்த பெரு முதலாளிகளிடம் சென்றுதான் இம்மாதிரியான நிதிகளை வசூலிக்க முடியும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அம்மாதிரியான நிலையில் இருக்